மண் பரிசோதனை பிப்ரவரியில் முடிகிறது

# மெட்ரோ ரெயில் 2-ம் கட்ட திட்டப்பணி ஜூன் மாதம் தொடக்கம்

## அதிகாரிகள் தகவல்

சென்னை, டிச.24—

சென்னையில் போக்கு வரத்து நெரிசலை குறைக்கும் விதமாக முதல் கட்டமாக மெட்ரோ ரெயில் வண்ணாரப் பேட்டை– விமான நிலையம், சென்ட்ரல்–பரங்கிமலை, இடையே இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த 2 வழித் தடத்திலும் ஓடும் மெட்ரோ ரெயிலில் தினசரி சராசரியாக ஒரு லட்சம் பயணிகள் பயணம் செய்கின்றனர். வண்ணாரப் பேட்டை விம்கோ நகர் இடையே 9 கி.மீ தூரத்துக்கான விரிவாக்க பணிகள் நடைபெற்று வருகிறது.

### 80 சதவீத பணிகள்

இந்தநிலையில்இரண்டாம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டம் மாதவரம்–சிறுசேரி, மாதவ்ரம்–சோழிங்கநல்லூர், பூந்தமல்லி – கலங்கரை விளக்கு ஆகிய 3 வழித்தடங் களில் செயல்படுத்தப்பட உள்ளது.

இந்த வழித்தடத்தில் 118.9 கி.மீ தொலைவுக்கு ரூ.85,047 கோடி மதிப்பில் திட்டப் பணிகள் நடைபெற உள்ளன. இதற்கான மண் பரிசோதனை பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. இதுவரை 80 சதவீத பணிகள் முடிந்துள்ளன.

முன்னுரிமை வழித்தடங் களில் 52 கி.மீ வரை பணிகள் முடிந்துவிட்டன. பிப்ரவரி மாதம் மண் ஆய்வு பணிகள் நிறைவு பெறுகின்றன.இது குறித்து மெட்ரோ ரெயில் அதிகாரிகள் கூறியதாவது:–

### 1926 இடங்கள்

இரண்டாம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்தில் முன்னுரிமை இல்லாத 2 வழித்தடங்களில் கோயம்பேடு– சோழிங்க நல்லூர் மற்றும் கலங்கரை விளக்கு–பூந்தமல்லி சுமார் 800 இடங்களில் மண் ஆய்வு நிலுவையில் உள்ளன. ஆற்காடு சாலை தொடங்கி போரூர் வழியாக காட்டுப் பாக்கம், பூந்தமல்லி வரை தற்போது மண் பரிசோதனை தீவிரமாக நடைபெற்று வருகிறது.

மாதவரம்– சோழிங்க நல்லூர் மற்றும் மாதவரம்–கோயம்பேடு ஆகிய 2 வழித்தடங்களும் முன் னுரிமை வழித்தடங்களாகும். முன்னுரிமை வழித்தடத்தில் 52 கி.மீ வரை மண் பரிசோதனை பணிகள் நிறைவடைந்துவிட்டன. இங்கு 1926 இடங்கள் மண் பரிசோதனை பணி நிறைவடைந்துள்ளது.

### பூந்தமல்லிவரை

மற்ற 2 பாதைகளில் 20 சதவீத மண் சோதனை பணிகள் மீதமுள்ளன. கோயம்பேடு முதல் காளி யம்மன் கோவில் வரையும், ஆற்காடு சாலையில் தொடங்கி போரூர் வழியாக பூந்தமல்லி வரை தற்போது மண் பரிசோதனை தீவிரமாக நடைபெற்று வருகிறது.

மாதவரத்தில் புவி தொழில்நுட்ப சோதனை மூலம் மண்ணின் நிலை கண்டறியும் பணிகள் 4 மாதத்துக்கு முன்பு தொடங்கின. சோதனையின் போது பல்வேறு முனைகளில் நீரோட்ட இடங்கள், கடின பாறைகள் கண்டறியப் பட்டன. இதன்மூலம் சுரங்கப் பாதை பணியின் போது ஒவ்வொரு இடத்திலும் மண்ணின் தன்மைக்கு ஏற்ப கருவிகள் பயன்படுத்தப்பட உள்ளன.

### பிப்ரவரி மாதத்துக்குள்

பலத்த மழையின் போது சில நேரங்களில் மெட்ரோ ரெயில் கட்டமைப்புகளில் மழைநிர் ஊடுருவிவிடும். இரண்டாம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்தில் இது முற் றிலும் தடுக்கப்பட உள்ளது.

இதற்காக மண்ணின் நீர் ஊடுருவலை சோதித்து பார்க்கிறோம். 2-ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்தில் மண் பரிசோதனையை பொறுத் தவரை நிறை வடைந்து விட்டது. மீதமுள்ள மண் சோதனை பிப்ரவரி மாதத் துக்குள் முடிவடைந்து விடும்.

இதையடுத்து ஜனவரி மாதம் டெண்டருக்கு அழைப்பு விடப்பட்டு ஜூன் மாதம் மெட்ரோ ரெயில் திட்டப்பணிகள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.